செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி மீ ௨௪ உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ௨] யாழ்ப்பாணம்- சாதாரண ௵ ஆவணி மீ ௨௬ உ வெள்ளிக்கிழமை (11-9-1970) [இல- ௨௪

# சிவகருமங்களில் முன்னிற்போர் சிந்திக்குக!

கஞ்சல் குப்பை ஏற்றும் 'டிருக்ர்' வாகனத் தொட்டியில்

## கடவுளரை எழுந்தருளச் செய்யலாமா?

## பழனி முருகப்பெருமானுக்குக் கலியுகத்தில் ஒரு கலியுகம்!

நிகழும் சாதாரண வருஷம் ஆடிமீ அமாவாசைத் தீர்த்தத் தினத்தன்று, பக்தர் குழாம தனித்தொழிய, வீதியலங்கார விளக்கமின்றி ஷை சிவசுப்பிரமணிய முருகப் பெருமான் பக்தர்கள் தொண்டைக் கவராது குப்பைத் தொட்டியில் திருவாசியைக் கட்டி, அதில திருவிக்கிரகத்தைக் கட்டித் திருவடி நிலைத் தீர்த்தத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

வழமைபோல வீதிகளில் சுவாமி வருகையைப் பக்தர்கள் எதிர்நோக்கித தீபாலங்காரஞ் செய்து அர்ச்சனைத திரவியங்களுடன் காததிருந்து ஏமாற்றத்துக்குள்ளாயினர். காததிருந்தவர் தீர்த்தகரையில் சுவாமி வருகையைக் கண்டு வருத்தமுற்றுத துடிதுடித்தனர்.

இச் செய்கையால் எதிர்காலத்தில் மற்று முபயகாரரும் தத்தம் வண்டிகளிலும் அதுவும் 'பைசிக்கிள்' வண்டிகளிலும் கட்டி விக்கிரகத்தைக் கொண்டு போகலாம் என்றகுறிப்பையும்நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர்! இனி வாகனங்கள், சகடைகள், தேர்கள் தேவையில்லை; மனிதப் பீடமும் தெய்வப் பீடமும், ஒன்றுனுலென்ன?' என்றும் மனக் குமுறலுடன் கடிந்தனர். இவற்றைத் திருத்தவும் முறையிடவும் ஒரு தலைவன் இல்லையேயென்றும் கதை நிகழ்த்தினர்.

ஆனல் பழனி முருகன் பழனியிலிருந்து இப்படிக் கொண்டு செல்லப்படுவார்! செல்லப்பட்டார்என்று இன்னும் பலர் அறியார்கள். தென்றிசையில் மேளமடித்துக் கேட்கப் பொன்னுலை வரதராசப் பெருமானும் தீர்த்தத்துக்கு எழுந்தருளி விட்டாரென்றும் இவ்வளவு வேகமாக விரைகின்றாரா! வென்றும் பேசிக்கொண்டனர்.

இதறகெல்லாம காரணமாக உள்ளவர்கள் அக்கோயில் குருமார் என்பது வெளிப்படை. அவர்கள் வேதாகம சாஸ்திர விதிகள அறியாதவர்கள் போலும்! அறிந்தவர்களானல் சுவாமியைக் குப்பைததொட்டியில ஏற்றி இருக்கமாட்டார்கள். உபயகாரருக்கும வழிகாட்டிகள் குருமார்களேயாம்.

என்னே! என்னே! கலியுகத்தில் கலியுகம்!! மாவிட்டபுரத்தில் சப்பாத்துக்காலவீதியிற் பட்டபடியால் பிராயச்சித்தமபண்ணப்படுகிறது. அதே சமயம பவ்வீயும் பரியும் ஏறும குப்பைத தொட்டியில் முருகனை ஏற்றலாமா? திருக்கோயிலுக்குள் சென்றவர் திரும்புவது சுவாமிக்குப் புறங்காட்டாது பின்னேக்கி நகர்ந்து சென்று திரும்பிப் போக வேண்டுமென்று ஆகமங்கள் அறைகின்றன. இப் பழனியில் ஒரு டீசல் நச்சுப புகையைக் கக்கும் இயந்திரத்தில் முருக விக்கிரகம் பின்னுக்கிருக்க, சாரதி முன்னுகப் புறங்காட்டிக் கொண்டிருத்தல் வேதாகமங்கட்குப் பொருந்துமா......?! முருகனைத் தீர்த்தத்திற்கு இப்படியாக எடுத்துச் செல்லும்படி ஏவியவர் ஏழு நரகத்திற கிழாகாரா? ஆ! ஆ!! அப் பாவியரால் இதைப் பார்த்திருந்த பக்தர்களும் பாவத்தைத அநுபவிக்கிறார்கள் கொடுமை! கொடுமை! கொலை செய்பவனிலும் கொலையைப் பார்த்துக்கொண்டிருப்பவர் மா பாவிகளாவர்

குருவில்லா வித்தை நடக்கிற காலம் இக்காலம் ஆனலும் சைவ வழிபாட்டை அநுசரிப்போர் சைவாகமங்களையும் அவறறை முறைப்படி கடைப்பிடித்தோரின வாழ்க்கைகளையும் பலாபலனகளையும நூல் வாயிலாகவேனும் அறிநது ஒழுகவேண்டுமல்லவா? அல்லது அயல் கிராமங்களில் நடப்பதைப் பார்த்தாகுதல் அறிவிலிகள் நடக்க மூன் வரவேண்டும் அதுவும் இயலாவிட்டால் சிவகருமங்களில் தலையிடாது விடலாம்.

இவ் விக்கிரகத்தில் முருகன் இனிச் சாந்நித்தியமாவதற்கு என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டும்? பழனி முருகன் மிக அற்புதம் நிறைந்தவர். அப்படியான மூர்த்தியினுடைய இலக்ஷண

---

உ
திருச்சிற்றம்பலம்

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்
நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவினவெள்வளைசோர
வென்னுளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுலகின்முதலாகிய
வோரூரிது வென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவிய
பெம்மானிவனன்றே.

திருச்சிற்றம்பலம்

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

---

களுத்துறை
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

## சங்காபிஷேகம்

களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் மகாசங்காபிஷேகம் 16-9-70 புதன்கிழமை சிறப்பாகநடைபெறவுள்ளது. இரவு திருவிழாவில் கூட்டு வழிபாடும இடம்பெறும் ந. நீ

---



உ
சிவமயம்

## புராணபடனம்

திருவருளை முன்னிட்டு ஆவணிமீ ௨௭௨ [12-9-70] சனிக்கிழமை இரவு 7-00 மணிக்கு சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் கந்தபுராணபடனம் ஆரம்பிக்கப்பெறும் சைவப்பெரியார் திரு. சி. தம்பியையா அவர்களும் பிறரும் தினமும் புராணபடனத்தைத் தொடர்ந்து புரிவார்கள்

சைவாபிமானிகள் இப்புராணபடனத்தில் பங்குபற்றி முருகப் பெருமானுடைய திருவருளைப்பெறுவார்களாக.

ஆ. தனபாலசிங்கம்
காரியதரிசி

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம். 7-9-70

---

ஈழத்துச் சிதம்பர

## புராணச் சுருக்கம்

எழுதியவர்: சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்கள்

திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் நூல் காரைநகரிலுள்ள திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கின்ற சுந்தரேசப்பெருமானின் வரலாற்றைக் கூறுவதாகும். இதன் ஆசிரியர் புலவர்மணி சோ. இளமுருகனுர் ஆவர். உரையாசிரியை அவரது வாழ்க்கைத் துணைவி பண்டிதமணி பரமேசுவரி ஆவர். இந் நூல் பத்துச் சருக்கங்களைக் கொண்டது.

ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம், மேற்படி நூலின் பொருளடக்கத்தையும் நயங்களையும் படிப்பவர்கள் எய்தும் பயனையும் சுருக்கமாக தெளிவாகவும் விளக்குகின்றது. எடுத்துக்காட்டாக நூலிலிருந்து சில செய்யுட்கள் சுருக்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. செய்யுட்கள் சிறந்த நடையில் பொருள்நயம் கவிநயம் அணிநயம் அமைய பாடப்

( வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

---

மான விக்கிரகத்தின் தெய்வீக சக்தியை இப்பிராயணர் கூட்டம் சிதைக்கத் துணியலாமா? சைவப்பெரியார்களே! முருகவாசபம இவ்விக்கிரகத்தில் இருக்கவேண்டுமானல் பிராயச்சித்தம் செய்வது மூதற கடனுகும் அதற்குப பக்தர்குழாம் திரண்டு ஆவன செய்யுமபடி கோயிலர்ச்சகரைக் கேளுங்கள், கேளுங்கள்

கோயிலைக் கட்டி எழுப்புவதாற் பயன் எனனே?! சுத்த சாட்குண்ணிய சின்மயமான பரம்பொருளல்லவா முருகக் கடவுள். அவரைச் சேவிப்பதற்கு மிகமிகப் பரிபக்குவம் தேவை பரிபக்குவமறியாத சேவையினுலும் இக் கொடிய செய்கைகளாலும் நரகத்துக்காளாவோம; காலமழை பெய்யாது. நாடு வளங் குன்றும். தரித்திரம் தலையெடுக்கும். கொடிய நோய்கள் மக்களைத துன்புறுததும்; தெய்வச் சாபம் ஏற்படும்,

ஆதலால் இப்படி கடவுளுக்கு ஏற்காத தீச்செயல்களை இனிமேல் ஒருபோதும் செய்தல் தகாது.

நா. சேனதிராசா,
யாழ். சைவசித்தாந்த சங்கத் தலைவர்.

சுளிபுரம், 10-8-70.

---

## அடிக்கல் நாட்டுவிழா

கொழும்பு விவேகானந்த சபையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் (11-9-70) இன்று மாலை 5 மணி முதல் 6 மணி வரையுள்ள சுப வேளையில் நிகழவிருக்கிறது.

---

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ஞு ஆவணி மீ உகூ-உ வெள்ளிக்கிழமை [1970]

## இறைவன் திருமேனியை நிந்தனை செய்யலாமா?

சர்வஞ்ஞனாய் சர்வகர்த்தாவாய் சர்வவல்லபராய் சர்வவியாபியாய் அரூபியாயுள்ள இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்டுள்ள கருணையினால் அவர்களுக்கு அநுக்கிரகம் புரியும் பொருட்டு உருவத் திருமேனி கொண்டெழுந்தருளுவர்

"திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே"

திருவாலயத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனிகளைச் சிவனெனவே கண்டு வழிபடும் அடியவருக்குச் சிவன் அத்திருமேனியில் சாந்நித்தியமாயிருந்து அநுக்கிரகஞ்செய்வர் சிவன் அவர்கள் உள்ளத்தைக் கோயிலாகக்கொள்வர். அவ்வாறு வழிபடும் அடியார்கள் சிவன் எழுந்தருளியிருக்கும் ஆலயங்களில் பயபக்தியுடன் ஆசார சீலராய்த் திருத்தொண்டு செய்தல் வேண்டும். திருவலகிடுதல் திருமெழுக்குச் சாத்துதல், திருநந்தவனம் ஆக்குதல், பூப்பறித்தல், பூமாலை தொடுத்தல், திருமுறைகளையோதுதல், வாகனங்காவுதல், கொடி குடை ஆலவட்டம் தாங்குதல், தீவர்த்தி பிடித்தல் முதலிய சரியைத் தொண்டுகளைப் புரிதல் சிறந்த பரபுண்ணியமாகும். அவ்விதமான தொண்டுகளை புரிவதினால் அவனுடைய கருவிகரணங்கள் தூய்மையடைகின்றன. அவன் சிவத்தன்மையடைகின்றான்.

ஒருமுறை கொழும்புத்துறை ஸ்ரீ யோகர் சுவாமிகள் பூநகரியிலுள்ள திகிரிப் பிள்ளையார் கோவில் உற்சவமொன்றில் வாகனங்காவினார். சிலர் அக்கோவிலில் சரியைத் தொண்டுபுரிய வெட்கப்பட்டதைப் பார்த்துவிட்டு "மக்களே! ஈழத்திலே பன்மொழி வித்துவானும் ஞானியுமாகிய புலோலி சிவபாதசுந்தரம்பிள்ளையினுடைய சமயத் தொண்டை நீங்கள் பின்பற்றுங்கள். அவர் பொலிகண்டிக் கந்தசுவாமி கோவிலில அப்பர் சுவாமிகளைப் போல வீதிகளைப் பெருக்கியும், தீவர்த்தி தாங்குதல் முதலிய சரியைத் தொண்டுகளைப் புரிந்தும வருகின்றார்" என அவர்களுக்கு புத்தி கூறினர்.

இந்த மகான்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றி நாங்களும ஆலயங்களில் சரியைத் தொண்டுகளைப் புரிதல் வேண்டும்.

கடவுளை வழிபடுவோர்களிடத்தில் பக்தியும் ஆசாரமும் இருத்தல் வேண்டும். ஒரு நோயாளி பத்தியத்துடன் மருந்தை உட்கொள்ளுதல் வேண்டும் பத்தியமின்றி மருந்தை உட்கொண்டால மருந்து சித்திக்காது அதேபோல் கடவுள் வழிபாட்டுக்கு ஆசாரம் உயிர். ஆசாரமின்றி வழிபாடியற்றுதல் பத்தியங்காக்காது மருந்து சாப்பிடுதல் போலாகும.

சென்ற ஆடி அமாவாசைத் தீர்த்தத்திலன்று சுழிபுரம் பறளாய் முருகமூர்த்தி கோவிற் சுவாமியை டிருக்டர் வண்டியில் அலங்கரித்து திருவடி நிலைக்கு எழுந்தருளச் செய்தமையை சுழிபுரம் சைவசித்தாந்த சபைத்தலைவர் சைவப்பெரியார் திரு. நா. சேனாதிராசா அவர்கள் கண்டித்தமை மிகவும் பொருத்தமுடையதாகும். அவருடைய கண்டனத்தில் ஒரு முக்கியமான எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். பறளாய் முருகமூர்த்தி கோவில் திருவாகிகளுடைய ஆகமவிரோதமான செயலை யாழ்ப்பாணத்திலுள்ள மற்றக் கோவில் திருவாகிகளும் பின்பற்றக் கூடுமென்ற அச்சத்தைத் தெரிவிக்கின்றனர்.

ஒரு கோவிலில் நிகழும் கிரியைகளெல்லாம் ஞானம் கிடைத்தற்கு உதவியாகவிருத்தல் வேண்டும். யந்திரசாதனங்களை உபயோகித்தலால் மக்களுக்கு ஒரு பயனுமில்லை. அச்செயல் கடவுளை நிந்தனைசெய்தமைக்குச் சமனாகும். அங்கு நிகழும் கிரியைகளை மக்கள் தங்கள் கருவிகரணங்களால் புரிதல் வேண்டும். அங்ஙனம் அவர்கள் செய்யத் தவறினால் அக்கிரியைகளினால் மக்களுக்கு ஒரு பயனுமில்லை. நாட்டில் மழையின்மை, வறுமை, நோய் முதலிய துன்பங்கள் பெருகும்.

அப்பர் சுவாமிகள் திருக்கைலை யாத்திரைக்குச் செல்லமுயன்றபொழுது அவருடைய உறுப்புக்களெல்லாந் தேய்ந்தன. காரைக்காலம்மையார் திருக்கைலைக்குத் தலையால் நடந்தருளினார். அவ்வுண்மைகளை உணரும் சைவ மக்கள் தங்கள் உடலினால் கோவிற் பணியைப் புரிய முன்வருவார்கள்.

## வைதிகத்திற் றிளைத்த கணிதவறிஞர்

### 31 வயதில் F. R. S. பட்டம்

[ ம. க. ச. ]

ஆண்டு 1887. மாதமோ குளிர் மிகுந்த மார்கழி. அக் காலத்திற்றான் தென்னிந்தியப் பிராமணத் தம்பதிகளிருவர்களுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அந்நேரம் தாய், தந்தையர் தம் பிள்ளை உலகம போற்றும் கணிதவுள்ளுணர்வு மிக்க அறிஞனவன் என இம்மியளவேனும் கருதவேயில்லை.

பையன் இராமானுஜன் –ஆம் அதுதான் அக் குழந்தையின் பெயர் – அமைதி மிகுந்தவனும் என்றும் எதையோ சிந்திப்பவனாகவும் இருந்தான். வறிய சூழ்நிலையிலிருந்த இராமானுஜன் கும்பகோணத்திலுள்ள உயர் கல்லூரியிற் கல்வி பயின்றனன். அந்நேரத்தில் அவனது திறமையைப் போற்றவோ, ஊக்கவோ யாரும் இருக்கவில்லை. 'ஆங்கில ஞானம்' குறைந்தமையால் பல்கலைக் கழகம் புக முடியவில்லை. இது இராமானுஜனை ஒரு சாதாரண இலிகிதர் ஆக்கிற்று. தோல்வி வெற்றியின் படியல்லவா?

இலிகிதர் இராமானுஜன் இராமச்சந்திர ராவ என்ற கணித வியலாளருடன் தொடர்பு கொள்ள ரூபா 75/- உதவி நன்கொடையாகக் கிடைத்தது. இது அவருடைய இயல்பான துறையில்- கணிதத் துறையிலேயே தான் – அவர் நேரத்தைக் கழிக்கவுதவியது. அன்றாடம் உணவுக்காகத் தொடர்ந்து உழைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தைத்தான் அது அகற்றிவிட்டதே!

இராமச் சந்திரராவ் இராமானுஜனுடன் தன் முதற் சந்திப்பை வர்ணிக்கின்றார்:-

"பல வருடங்கட்கு முன்பு எனது மருகன் ஒருவன்- கணிதம் என்பதே என்னவென்று தெரியாதவன்-புகன்றான்; "மாமா, இங்கு ஒருவர் வந்திருக்கின்றார். கணிதம் பற்றி என்னவோ எல்லாம் கூறுகின்றார். எனக்கு அவர் கூறுவது ஒன்றும் புரியவில்லை. அவர் கையில் ஏதாயினும் இருக்கிறதா எனப் பாருங்கள்." எனக்கிருந்த கணித ஞான விசாலம் ஆர்வத்தினால்நான் இராமானுஜனை என் முன்னிலைக்கு வர அனுமதித்தேன். ஒரு குள்ளமானதும் விநோதமானதும், பருமனானதுமான உருவம் சவரஞ் செய்யவில்லை எடுப்பான கண்களுடன் கையிடுக்கில் தேய்ந்துபோன ஒருகுறிப்புப் புத்தகத்துடன்வந்து நின்றது பரிதாபப்படக் கூடிய வளவுக்கு ஏழை கும்கோணத்திலிருந்து சென்னைக்குத் தன் படிப்பைத் தொடருதற்கான நேரம பெறுதற்காக வந்திருந்தார் – பட்டம பதவிக்கு அவாக்கொள்ளவில்லை. ஓய்வுநேரம்– சுருங்கக்கூறின் அவர் கட்டப்படாது தன் கனவுலகில் இருக்க உணவு கொடுக்கப்பட வேண்டும்.

இந்தக்குறிப்பை எடுத்துத் தன் கண்டு பிடிப்புக்களை விளங்கப்படுத்தத் தொடங்கினார். நான் சடுதியாகப் புதியவை வருகின்றன என உணர்ந்தேன்; ஆனால் என்னறிவு அவர் கூறுவதில் ஏதும் இருக்கின்றதா இல்லையா எனக் கூற இடங்கொடுக்கவில்லை. தீர்ப்பை ஒதுக்கிவைத்துக் கொண்டு, இன்னொரு தடவை வரச் சொன்னேன். அவரும் அப்படியே செய்தார். என்னறிவின் குறுகிய தன்மையை அளந்து, தனது எளிய முடிவுகள் சிலவற்றைக் காட்டினார் ஏற்கனவே இருந்த புத்தகங்களையெல்லாம் அவை விஞ்சி நின்றன – ஆள் சாதாரணமானவரல்லரென்பதைஐயந்திரிபற வறிந்தேன். பின்பு படிப்படியாக நீள்வட்டத் தொகையீடுகளிலிருந்து அதிகேததிர கணிதத் தொடருக்கு வந்து கடைசியாக வரி தொடர் பற்றிய – இதுவரை உலகமறியாத – தன் கொள்கையைக் காட்டியதும நான் முற்றாக மாறிவிட்டேன், நான் அவருக்கு வேண்டியது என்னவென்றேன் தான் படிப்பைத் தொடர – தான் வாழ – சிறு நிதியுதவி வேண்டுமென்றார்."

#### G H கார்டியின் தொடர்பு

சேஷஐயரின் எண்ணத்தின்படி G H. ஹார்டி என்ற பிரபல கணிதவறிஞருடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினார். இந்த ஹார்டியேதான் பின்னைய காலத்தில் இராமானுஜனைத் தீவிரமாக ஊக்கும் தன்மை வாய்ந்தவராக இருந்தார். அவர் 16-1-1913 அன்று எழுதிய முதற் கடிதத்தின் ஒருபகுதியின் தமிழாக்கம்.

"நான் பல்கலைக் கழகத்தில் படித்தவனல்லன். ஆனால் சாதாரண பள்ளிப் படிப்பு ஞானம உள்ளவன். பள்ளியை விட்டதும் எனது மிதமான நேரத்தை நான் விரும்பியவாறு கணிதத்திற் செலவிட்டேன். விரிதொடர்பற்றி நான் ஒரு பிரத்தியேகமான ஆராய்ச்சி செய்துள்ளேன். மிகச் சொற்ப காலத்திற்கு முன்பு நீங்கள் வெளியிட்ட "முடிவிலிகளின் வரிசைகள்' என்ற சிறிய ஆராய்வு நூலைக்கண்ணுற்றேன். அதில 36 ஆம் பக்கத்தில் ஒரு குறிப்பிட்ட எண்ணிற்குட்பட்ட முதன்மையெண்களின் தொகைக்கு ஒரு திட்டமான சூத்திரம் ஒன்றும் காணப்படவில்லையெனக்கூறியுள்ளீர்கள் நான் அதற்காய சூத்திரத்தைச் புறக்கணிக்கக் கூடிய சிறு வழுவுடன் கண்டுள்ளேன். இத்துடன் அனுப்பும் கட்டுரையைப் படிக்குமாறு வேண்டுகின்றேன். நீங்கள் ஏதாயினும பெறுமதி வாய்ந்தவை உள்ளனவெனத் துணிந்தால் – நான் ஏழை– அதனை வெளியிடுவதற்கான ஆயத்தங்களைச் செய்வீர்களாக."

ஹார்டி, மேல் வரையப் பட்ட கடிதம் இராமானுஜனின் சொந்த ஆங்கிலத்தாலானது அல்ல என்பதை அறிந்திருந்தார். இராமனுஜனின் நேர்த்தியான தீர்வுகள், ஹார்டியை மிகவுங் கவர்ந்தன. இதனால் ஹார்டியின் பதிற் கடிதம் ஊக்கமூட்டுவதாகவும் பரிதாபந் தொனிப்பதாகவுமிருந்தது.

இராமனுஜன் அதைத் தொடர்ந்து இரண்டாம் கடிதமொன்றை 27-2-1913இல் எழுதினார்:-

( வளர்ச்சி 3- ஆம் பக்கம் )

## கல்வி, கலை கலாசாரக் கழகம்

கல்வி, கலை, கலாசாரக் கழகம் ஒன்றினை நிறுவி நாட்டின் பழம் பெரும் செல்வங்களைப் பேணிக் காக்கும் பெருநோக்குடன் இத்துறையிலுள்ளவர்களை இணைத்து வேண்டிய ஆலோசனைகளைப் பெறும்பொருட்டு எதிர் வரும் (14-9-70) மாலை 5-00 மணிக்கு யாழ். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில அங்குரார்ப்பணக் கூட்டம் நிகழவிருக்கிறது. ஷ ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் தலைமை வகித்து ஆரம்பித்து வைப்பார்கள். இக் கூட்டத்தினை திரு. ஆ. துரைராசசிங்கம், (யாழ் மா. உதவி நகரபிதா) திரு. ச பெனடிக்ற் (ஓவியர்) ஆகியோர் ஒழுங்கு செய்துள்ளனர். க. வி.

### அதிசயமாகத் தோன்றிய விநாயகர்

சென்னைத் தியாகராய நகரில் பூமியிலிருந்து ஒரு விநாயகர் திருவுருவம் கிளம்பியதாகத் தெரியவருகின்றது. சென்றபுதன்கிழமை அர்த்த யாமம் 2–30 மணிக்கு இது நிகழ்ந்தது. பெருந்திரளான மக்கள் சென்று தரிசிக்கின்றனர். செய்தியை அறிந்ததும் ஸ்தல கவுன்சிலர் திரு. கே, எம், சுப்பிரமணியம் வந்து வணங்கி நிவேதனம் படைத்து கர்ப்பூர தீபம் ஏற்றினார். பலர் பாலால் அபிஷேகம் புரிகின்றனர்.

# வைதிகத்திற்றிளைத்த கணித வறிஞர்

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

"உங்களில் ஒரு நண்பனைக் காண்கின்றேன். அந்நண்பர் என் பிரயாசைகளை அனுதாபத்துடன் பார்க்கக் கூடியவராயுள்ளார். இதுவே என் முயற்சியைத் தொடர வேண்டிய ஊக்கமாயிற்று. எனது மூளையைப் பாதுகாக்க, எனக்குணவு வேண்டும் இதுவே எனது முதற்பிரச்சினை உங்களிடமிருந்து இங்குள்ளார்க்கு வரும் ஏதாயினுமோர் அனுதாபக் கடிதம் எனக்கு உதவிப் பணம் பெற்றுத் தருவதாயமையும்"

இங்கிலாந்துக்கு இராமானுஜன் வந்தால் நவீன கணித நுட்பங்களைக் கற்றுக் கணிதவியலின் முன்னேற்றத்திற்கு இராமானுஜன் தனது பகுதியைச் செவ்வனே முடிக்கக் கூடும் என நினைந்து ஹார்டி இராமானுஜனை தன்னாட்டிற்கு ஈர்க்கப்பார்த்தார் ஆனால் இராமானுஜனின் சாதிக்கட்டுப்பாடுகளால் ஹார்டியின் முயற்சிகள் பலிக்கில எவ்வாறாயினும், இராமானுஜன தன் முழுநேரத்தையும் கணிதத்துறைக்கு அர்ப்பணிக்கக் கூடியதாகவிருந்தது

1914 ஆம் ஆண்டு தொடர் விரிவுரைகள் இயற்ற வந்த நெவில்ஸ் என்பார் இராமானுஜனை, ஹார்டியின் பிடிவாதத்தின் பேரில் சந்தித்து இங்கிலாந்து வருமாறு வற்புறுத்தி வெற்றியுங் கண்டார் இராமானுஜன் 17-3-1914 ஆண்டு இங்கிலாந்திற்குப் பயணமானார். அங்கு கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகக் கல்லூரியில் ஏற்றுக்கொள்ளவும்பட்டார். ஹார்டி இலிற்றில் ஊட்டு என்பவர்களது மேற்பார்வையின் கீழ் முழுமரமாக முன்னேறினர். 11-10-1915 அன்று சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எழுதிய கடிதத்தில் ஹார்டி கூறுகின்றார்:-

"யுத்தத்தால் இராமானுஜன் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார். திரு இலிற்றில் ஊட்டு இயல்பாகவே என்னேடிசைந்து படிப்பித்திருப்பார், ஆனால் அவர் இங்கு இலலை. இத்துணை செழிப்பான மாணவனுககு ஓராசிரியன் போதாது. அவர் நவீன காலதது மிகத் திறமான இந்தியக் கணிதவியலாளர் என்பதிற் சந்தேகமேயில்லை. தன் பாடங்களைத் தேர்வதிலும் அவற்றை நிவகிப்பதிலும் அவர் விநோதமாகவேயிருப்பார். அவருக்குரிய அசாதாரணமான ஆற்றலைப்பற்றி இம்மியளவேனும் ஐயமில்லை. சில காரியங்களில் அவர் நானறிந்த மிகச்சிறந்த கணிதவறிஞராவர்.

சுகாத்திய மாற்றத்தால் இராமானுஜனைக் கயரோகம் பாதித்தது. பல நோய் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்ருர். 1918 ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தின்போது முன்னேற்றத்தின் அறிகுறிகள் தென்படுவதாயிற்று.

இவ்வளவு சொற்ப வயதில் முன்னெருவரும் பெருத விருது

முன்னெருநாளும் 31 வய ... இன்னுமொருவ

ருக்கு F. R. S. பட்டம் கிடைக்கவேயில்லை. 28-2-1918 இல் இராமஜனுக்கு இப்பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டத்தை பெற்ற முதலிந்தியர் இராமானுஜனேயாவர்.

13-9-1918 இல் திரும்பூர்த்திக் கல்லூரியின் அங்கத்தினராக்கப்பட்டார். (Fellowot the Trinity College, Cambridge) இதனுல் அவருக்கு வருடம் £ 250 - யாகொரு நிபந்தனைகளின்றியும் வரி யின்றியும் கிடைத்தது

இதைச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ஹார்டி அறிக்கையில் கூறுகின்ருர்:-

'இந்தியாவுக்கு அவர் வருகையில் முன்னெருகாலும் எவ்வியந்தியனும் பெற்றிரா விஞ்ஞான அறிவுடனும், புகழுடனும் வருவார் இந்தியா அவரைச் மதித்தறகரிய செல்வமாக மதிககுமென திடமாகக் கூறுவேன்"

இராமானுஜன் 23-7-1919 இல் பம்பாயில் இறங்கி, 26-4-1920ல் மீனாத்துயிலில் ஆழ்ந்தார். இதைக் கனவிற் கூட ஹார்டி கண்டிட்பாரோ என்ருல் - இல்லை என்பதே விடையாகும்'

பல கணிதவறிஞர்கள், இராமானுஜனின் கணிதத் துறையிலான கண்டுபிடிப்புகள் மிகவும் நுட்பகரமானவை எனக் கூறுவர். ஹார்டி பெரிதும் வியந்து பேசுகிருர்:-

" அவரது ஞானத்தின் வரையறை- அதன் ஆழத்தைப் போன்று திகைக்க வைப்பதாயிருந்தது இம்மனிதர் மட்டுச் சமன்பாடுகள் பற்றியும், சிக்கற்பெருக்கங்கள் பற்றிய தேற்றப் பற்றியும் எந்த கணிதவறிஞராலும் செய்ய முடியாதவளவு ஆராய்ச்சி செய்துள்ளர். உலகத்திலுள்ள எந்தக் கணிதவறிஞனையும் விட மிக முறையாகத் தொடர் பின்னங்களைக் கையாள்கின்ருர். இவர் தானகவே-வெளியுதவியின்றி - சீற்ருச் சார்பு பற்றிய தொடர்பையும், நவீன எண் கொள்கைகள் பற்றிய கூற்றுகள் பலவற்றையுங் கண்டுபிடித்தார்; இவ்வளவுக்கும் இவரோ இருமை அலைவுச் சார்வு பற்றியோ கோசுவின் தேற்றம் பற்றியோ அறிந்திருந்தாரில்லை சிக்கல் மாறியின் சார்பு இன்னதென்றே அறியார். கணித நிறுவலின் தன்மைகள் பற்றிய அறிவு தெளிவானதல்ல. அவரது பேறுகள் யாவும் - சரியோ பிழையோ - உள்ளுணர்வு, தர்க்கம், தொகுப்பு முறைகளாற் காணப்பட்டவையே இதற்கு அவரிடமிருந்து ஒரு ஒழுங்கான விளக்கம் எதிர்பார்க்கவியலாது"

ஹார்டியின் உண்மையான மேற்பார்வையின் கீழ் இராமானுஜன் "சார்புகள் பற்றிய கொள்கை பற்றியும் எண்கள் பற்றிய கொள்கை பற்றியும்" போதியளவு கற்றறிந்தார்; ஹார்டி இராமானுஜனின் கண்டுபிடிப்புகளைப் பெரிதும் மெச்சியவராவர்

(வளரும்)

## வெருகலம் பதி முருகன் கோவில்

ஈழநாட்டின் பெயர் பெற்ற கந்தகோட்டங்கள் பலவற்றுள் மிகவும் பழமை வாய்ந்ததாக வெருகலம்பதியில் உள்ள வேலாயுதசுவாமி கோயில் விளங்குகிறது இவ்வாலயப் பகுதியினை அண்டியிருக்கும் பல கிராமங்களும் பழமையான சைவ புனித அனுஷ்டானங்களைக் கொண்டதாகவும் சைவ ஆலயங்களுக்கு அவ்வப்பகுதி மக்கள் செய்த தொண்டினைக்கொண்ட காரணப் பெயர்களைக் கொண்டும் விளங்குகின்றன. இப்பகுதிக்குத் தெற்கே வங்காள விரிகுடாவில் விழும் மகாவலிகங்கை, கொட்டியாபுரக் குடாவில் விழுந்து, வெருகல் கங்கை, குருக்கல் கங்கை என இரு பிரிவுகளாகப் பிரிந்து செல்கின்றன வெருகல் என்னும் கங்கை இளமுருகன் எழில்காண 'அரோகரா' என்னும் சத்தத்தோடு பாய்ந்து செல்லும் பரிசுத்த தன்மையுடன் விளங்குகிறது

இவ்வாலயம்பற்றிய வரலாறு, திருக்கோணுசலவைபம்' என்னும் நூலில் விளக்கப்பெற்றுள்ளது

இவ்வாலயத்தில் வருடாவருடம் ஆவணித் திங்கள் உத்தர நட்சத்திரத்தன்று ஆரம்பமாகி 18 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது

முதல் ஆறு நாட்களும் பிள்ளையாரும் ஆதிதேவரும் உள்வீதி வலம் வருவர் 7ம் நாள் சந்திக் காவல்நடைபெற்றுசுவாமிவெளிவீதி வலம வருவர். 9ம் நாளன்று சித்திரவேலாயுதசுவாமி கேடயத்தில் எழுந்தருளி வருவார். 18ம் நாள் வேட்டைத் திருவிழா நடைபெறும். திருவிழாக்களின் போது ஏராளமான காவடியாட்டங்கள் கண்கொள்ளாக் காட்சியாக விருக்கும்.

## கீரிமலைச் சுரங்கம்?



பக்தர்: "பழங்காலத்துச்சுரங்கப் பாதையொன்றைக் கண்டு பிடித்துள்ளார்களாமே! அதுபற்றி ஆராய்ச்சி ஏதும் நடக்குமா ...?

சித்தர்: "ஆராய்ச்சி நடத்துங்க அப்பிடீன்னு கேட்டிருக்கிறங்க; ஆனுல்... ஆராய்ச்சியினுல் என்ன பயன் வரப்போகுது? என்கிற ஆராய்ச்சியாளர்கள் நமக்குள் மலிந்திருக்கிறங்க! என்னென்ன நடக்குமோ?

"நாயன்மார்- நாதன்"

## வரவேற்பு விழா

காரைநகர் வாரிவளவு கல்வியகச் சபை வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா அவர்களுக்கு 15-9-70 செவ்வாய்க்கிழமை மாலை 4½ மணி ஷ சபை மைதானத்தில் ஒரு வரவேற்பளிக்க ஒழுங்கு செய்துள்ளது. திரு. க. ... சபை சுகாதாரப் பரிசோதகர் திரு க சிவராமலிங்கம் பீ.ஏ திரு. பி. எஸ். குமாரசுவாமி. திரு. எஸ். விஜயானந்தம் ஆகியவர்கள் விரிவுரையாற்றுவர்.

## ஏழாலை இந்து சமய விருத்திச் சங்கம்

ஏழாலை இந்து சமயவிருத்திச் சங்கத்தின் 12ம் ஆண்டு நிறைவு விழா ஏழாலைச் சன்மார்க்க வித்தியாசாலை மண்டபத்தில் திரு மு சிற்றம்பலம் தலைமையில நிகழ்ந்தது காரியதரிசியினதும் தனாதிகாரியினதும் அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. அடுத்த வருட உத்தியோகத்தர் தெரிவும் நிகழ்ந்தது

## விநாயக சதுர்த்திவிழா

விநாயகர் சதுர்த்திவிழா பிரித்தானிய சைவமாமன்றத்தினரால் செப்டெம்பர் 4ஆம் தேதி மாலை விம்பள்டனில் சிறப்பாக நடைபெற்றது.


# பிஸ்கால் விற்பனை

[ FISCAL SALE ]

பிஸ்கால் ஆபீசில்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம் கந்தர்மடம்

சின்னத்தம்பி சண்முகம் நடராசா — வழக்காளி.

இல: MS. 4110. வரோதமாக

யாழ்ப்பாணம் பிரதான வீதி

பிரசித்த நொத்தாரிசு S. இரத்தினசிங்கம் — எதிராளி

இதன் கீழ் காணப்படும் ஆதனங்களின் மேற்சொல்லிய வழக்கில் எதிரிக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1970 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 21-ஆம் தேதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோரில் பிரசித்த வெந்தீசில் விற்கப்படுமென்று இத்தாலறிவிக்கப்படுகிறது. அதாவது:—

றேடியோ "பை" மார்க்கு, P E. 40.

வரிசை இலக்கம் 135125. பாவிப்புக்குரிய நிலையில் உள்ளது.

அறவிடப்படவேண்டிய தொகை

ரூபா 5865/— இதில் ரூபா 5000/—க்கு 3-2-69 தொடக்கம் 8-7-69 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் 9-7-69 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 31-50, பிஸ்கால் சலாரும் பவுண்டேச்சும்.

சி. அ. மகாதேவன்,
மேலதிக பிரதி பிஸ்கால்,
வடமாகாண பிஸ்காலுக்காக.

பிஸ்கால் கந்தோர்,
யாழ்ப்பாணம், 6-9-70.


## விசேஷ தினங்கள்

14-9-70 திங்கள் நடேசரபிஷேகம், 15 செவ்வாய் பூரணை விரதம் தொண்டமானாறு செல்வச்சந்நிதி தீர்த்தம், 16 புதன் மஹாளயபக்ஷ ஆரம்பம். 19-9-70 மகா பரணி 20 ஞாயிறு கார்த்திகை விரதம் 21 திங்கள் நந்தனார் குருபூசை, 27 ஞாயிறு பிரதோஷ விரதம் 28 திங்கள் அருணந்திசிவாச்சாரியார் குருபூசை. 30 புதன் அமாவாசை விரதம் மஹாளயபக்ஷ முடிவு.


## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

உள்நாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |

வெளிநாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |

# ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம்

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

பெற்றுள்ளன. இந்நூல் சிறந்த காவியங்களுக்குள்ள நயங்கள் பொதிந்துள்ளன வென்பதை ஷைசுருக்கத்தினுல் அறியக் கிடக்கின்றது. கோவிலைத் தாபித்தற்கு மூல காரணராக இருந்த பெரியார்கள் ஆண்டிமுனிவர் அம்பலவி முருகர் ஆகிய இருவருடைய பணிகள் சிறப்பாக விளக்கப்படடிருப்பது பொருத்தமாகும்.

நூல் அச்சாகி விரைவில் வெளிவரும். நூல் வெளியீட்டுக்கு இதுவரை மெய்யடியார்கள் பொருளுதவி புரிந்திருக்கின்றனர். சேர்ந்த தொகைபோதியதன்று. அடியார்கள் மேலும் பொருளுதவி புரிந்து இச் சிவப்பணி சிறப்புறப் பூர்த்திசெய்வார்களாக. இந்நூல் ஒவ்வொரு சைவ மக்கள் வீட்டிலும இருத்தல் வேண்டும்.

நூலின் உரையைப் பற்றிக குருக்கள் அவர்கள் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. "இந் நூலுக்கு அமைந்தஉரை நூலின் உள்ளக் கருத்தை உள்ளவாறு எடுத்துக்காட்டி கறபோர்க்கு இன்பம் பயக்கின்றது. பழைய உரையாசிரியர்களாகிய நச்சினுர்க்கினியர் பரிமேலகியார் முதலியோரின் உரைமரபைப் பெரிதும பேணித திட்பமும நுட்பமுமசெறந்து விளங்க எழுதியதைப் படிப்போர் பதந்தோறும் சுவைப்பர்"

அம்பலவி முருகர் சோமாஸ்கந்த மூர்த்தியை வார்க்கச்

---

## நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

---

சிதம்பர தலத்துக்குச்சென்று சிதம்பரம் நடராசப்பெருமானை வழிபட்டு விண்ணப் செய்த செய்யுள் நூலின் பக்திச் சுவைக்கும் சைவசித்தாந்த மரபுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவிளங்கும்.

நீயே யாண்டான் நானடிமை
நீயே யுணர்த்த வுணர்
[கின்றேன்
நாயே யனையா யென்பிழைகள்
தாலநுலா கருணைக்
கடங்கடலே
காயம் பொருளு மென்னுயிரு
முன்பா லளித்தேன்
கடுவுண்டும்
மாயா திருக்கும் பெருமருந்தே
மலர்த்தாள் புகவே
வேண்டுகின்றேன்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கட்டுடை, மானிப்பாய் 1. சின்னத்தம்பி கனகசபை
2. பெண் மங்கையற்கரசி
—வழக்காளிகள்

கட்டுடை, மானிப்பாய் 1. மூர்த்தத்தம்பி கருணனந்தன்
2. பெண் வசந்தாதேவி
— பதில வழக்காளிகள்

இல: M B 5088 எதிராக

1. ஜோன் எனஸ்ற பிரெடறிக் ஆசீர்வாதம் தற்சமயம் லண்டன். 95, பிரதான வீதி, யாழ்ப்பாணம். இவருடைய தத்துவக்காரன் அல்பிரட் எட்வேட் தம்பர்
— பதில எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 5088 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணியை 1970-ம் ஆண்டு ஐப்பசிமீ 27-ம் திகதி (27-10-70) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 6660/- இதில் ரூபா 4500/-க்கு 21-9-62 திகதி தொடக்கம் 10-9-63 திகதி வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுபடும வரைக்கும் 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபாய் 200/- முதல் கணக்காக ரூபாய் 1000/- கொடுபட்டது பின் முதல் கணக்காக ரூபா 2000/- கொடுபட்டது.

ஆதன விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை பிறையாடி வளவு நிலப்பரப்பு 4 ஏழி 14½ செய்யயிர்களும் எல்லை மழக்கு E. R. T. சதுருகுல சிங்கத்துரிய ஆதனம், வடக்கு ஜோன் மாட்டின் கருத்தாளிகளுக்கும் நிக்கலஸ் மைம்பெண மேரிப்பிள்ளைக்கும் காலஞ்சென்ற வருபேட் ராஜரட்டினம தம்பரின் உரித்தாளகளுக்குமுரிய ஆதனமும மேற்கு டேவட் றேட், தெறகு ஜோஸ ஜோசேப் திசவீரசிங்கி பெண் செலீன தங்கக்குட்டிக்குமுரிய ஆதனமும தற்போது கனகியாக்பிள்ளை சீமாம்பிள்ளை செல்லத்துரை மைம்பெண முத்தம்மாவுக்குரிய ஆதனம், இதடங்கலும் விற்கப்படும.

ந. ஆறுமுகம்,
சித்தங்கேணி, கொமிஷனரும விலைமதிப்பாளரும
30-8-70. எம், 260, 11-9-70 வெந்தீஸ் மேஸ்தரும்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. S. வெற்றிவேலு பெண்
2. மகேஸ்வரி
K. வேலாயுதபிள்ளை பெண் பசுபதி அம்மா
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்
—வழக்காளிகள

இல. M. B. 9094 D. C. J. எதிராக
சின்னக்குட்டியன் பாலன். உரும்பிராய் தெற்கு
உரும்பிராய் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9094-ம் இலக்க வழக்கின் எனக்குக் கடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1970-ம் ஞூ புரட்டாதி மாதம் 20-ஆம் உ (20-9-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 4215/-ம், 19-5-67 தொடக்கம் 20-1-68 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 292-30 சதம.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராய் இறை பெரியகுஞ்சிப்புலம் பிரிக்கப்பட்ட நி. பர. 3¾ பரப்பு K 201/6 வீடும் கிணறுகளும் மற்றவைகளும் எல்லை கிழககு மணியம் சின்னத்தம்பிக்கும் பங்காளருக்கும் உரித்தான ஆதனம், வடக்கு கப்புக்குட்டி வயிரமுத்துவுககும் பங்காளருககுமுரிய ஆதனம், எல்லை மேற்கு இராசமாணிக்கம் சபாபதி பெண் பரமேஸ்வரிககுரித்தான ஆதனம், தெற்கு சோமசுந்தரம் ஆனந்தனுக்குமுரிய ஆதனம் மேற்சொல்லப்பட்ட 7½ பரப்பு K, 54/57 198/272ல் கீழ்ப்பதியப்பட்டுள்ளது M B 9093 D, C. J. இலக்கத் தீர்வையும் இதில் நின்று அறவிடப்படவேண்டியது.

மா. முருகேசு J. P.
இந்திரபவனம், கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
புங்குடுதீவு, எம். 261 11-9-70
15-8-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 6209
கொக்குவில்
1. T. ஞானசுந்தரமும்
2. பெண் கனகசுந்தரியும்
—வழக்காளிகள்
எதிராக
திருநெல்வேலி,
கந்தையா கைம்பெண் பூரணம் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6209ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1970ம் ஞூ ஐப்பசி மீ தம் 10-ம்திகதி (10-10-70) சனிக்கிழமை முற்பகல் 11 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் எனனுல் விற்கப்படும.

தீர்வைத்தொகை:- ரூபா 6050/-ம் 22-11-63 தொடக்கம் 4-8-64 வரைக்கும் ரூபா 4000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 125/-ம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப் பகுதி, கரைச்சி கோவிற்பற்று முரசுமோட்டைஇறை "முரசுமோட்டை கமம்" ஏக்கர் 27 றூட் 2 பேர்ச் 32. எல்லை கிழககு பன்னங்கண்டி ஆறு, வடக்கு றேட்டுககாக ஒதுக்கப்பட்ட காணி, மேற்கு 79 வது துண்டு தெற்கு றேட்டுக்காக ஒதுக்கப்பட்ட காணி. B. 38/18ல் பதியப்பட்டது, இதடங்கலிலும 4/10 பங்கு சொறியலாக.

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர், விலை மதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
மல்லாகம், 4-9-70
எம் 259 11-9-70.

---

கும்பாபிடேகத்

## திருவிழா

உரும்பிராய் நாற்சந்தியில் கோப்பாய்க்குச் செல்லும் வீதியில் அரசமரச் சூழலில் காஞ்சி மாமர நிழலில் அமைந்திருந்து அருள் பாலித்து வரும் ஞானவைரவசுவாமி திருக் கோயில் வைரக்கற் திருப்பணி வேலை பூர்த்தியாகிக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேற்படி கோவிலின் எதிரே நிற்கும் அரசமர நிழலிற் காசியில் இருந்து கொண்டுவரப் பெற்ற சிவலிங்கப் பெருமானுக்கு புதிய ஆலயம் தூபியுடன்கூடியதாக அமைக்கப் பெற்று நாளை 12-9-70 சனிக்கிழமை உதயத்துக்கு எண்ணெய் முழுக்கு ஆரம்பமாகி நடைபெறும். க. வீ.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

MB 10388

1 சின்னத்தம்பி கதிரவேலுவும் பெண்
2 தில்லைநாயகி (இருவரும) திருநெல்வேலி
யாழ்ப்பாணம — வழக்காளிகள்
எதிராக
திருநெல்வேலி யாழ்ப்பாணம், கநதையா கைம் பெண் பூரணம்
— எதிராளி

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டின் MB 10388-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கடடளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக் காணிகளை 1970-ம் ஞூ 10-10-70 (ஐப்பசி) மீ 10 சனிக்கிழமை முற்பகல 10 மணிக்கு முதலாம் காணியும. 11-00 மணிக்கு இரண்டாம் காணியும், 12-00 மணிககு மூனறும காணியும அந்தந்தக காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 28,255/-ம் 22-10-68 தொடக்கம 18-7-69 வரைக்கும் ரூபாய் 22,885/-க்கு 6 வீத வட்டியும அதனபின் முழுததொகைககும இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோடடுச் செலவு ரூபாய் 300/- முத்திரைச் செலவு கொமிஷனுக்காக ரூபா 21/—

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம்டி ஸ்திறிக் நல்லூர்ப்பகுதி திருநெல்வேலி இறை "சக்கடவத்தை" பர நில. இலா. 4½ தெற்கெல்லையிலுளள கிணற்றில் தணணீர்ப் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புருததும் இதறகு எல்லை கிழக்கு சினனப்பு துரையப்பாவும் பெண் செலலாசசிககுமுரிய ஆதனம், வடக்கு செல்லமுத்து சின்னததம்பிக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு சின்னப்பு துரையப்பாவுககும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலும். பிரிவிடப்படாத பர நில இலா. 1, 3/8 வீடும், நிந்தம்.

பதிவு இல: D. 291/40

2. மேற்படி இறை 'சக்கடவத்தை' பர நில. இலா 5 வடமேற்கு மூலையிலுள்ள கிணற்றில் பங்கும் இதற்கு எல்லை கிழக்கு வீரகத்தியர் கந்தையாவுக்குரிய ஆதனம். வடக்கு வல்லிபுரம் தம்பு பெண் கனகம்மாவுக்குரிய ஆதனம், மேற்கு: சின்னப்பு செல்லையாவுக்குரிய ஆதனம், தெற்கு அன்னலிங்கம் பெண் பாககியத்துக்குரிய ஆதனம், இதடஙகலும பதிவு இல: D 263/106

3. மேற்படி இறை 'சககடவத்தை' பர. நி. இலா. 2, 1/8 இதற்கு எல்லை கிழக்கு தம்பு பெண் கனகம்மாவுக்குரிய ஆதனம், வடக்கு சின்னத்தம்பி பெண் மாணிக்கத்துககுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு அப்பாக்குட்டி பொனனுச்சாமியும் பெண் ஆச்சிப்பிள்ளைககும் சின்னக்குட்டி அப்பாக்குட்டி பெண் அன்னமுத்துவுக்குமுரிய ஆதனம், இதடங்கலும் பிரிவிடப்படாத பர. நில. இலா 1, 1/8 வீடும, நிந்தம. பதிவு இல: D. 187/278

20, பெருமாள்கோவில் நா. ஸ்ரீஇரங்கநாதன்
வடக்கு ஒழுங்கை. கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
யாழ்ப்பாணம். 24-8-70 எம், 258 4-9-70

---

## பிஸ்கால் விற்பனை

இல: 8511/P பருத்தித்துறை மாவட்டக் கோட்டில்

வருத்துப்பளை 1. சின்னத்தம்பி தம்பிஐயா
2 பெண் பகவதி —வழக்காளி
விரோதமாக
வருத்துப்பளை சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை —எதிராளி

கோட்டாரால் அனுப்பப்பட்ட கட்டளைப்படி இதன் கீழ் சொல்லப்படும் ஆதனம 1970ம் ஆண்டு ஐப்பசி மீ 8-ந் திகதி காலை 10 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் 1951ம் ஆண்டு 16ம இலககபாட்டிசன் சட்டப்படி விற்கப்படும்.

காணியின் விபரம்: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சி பகுதி பருத்தித்துறை கோவிற்பற்று வருத்தப்பளை இறை மதிரன் கட்டுவன் 17, 23/32 குளி இதடங்கலும் எல்லை கிழககு முருகன் சின்னத்தம்பியின் ஆதனம், வடக்கு 1947 - 8 - 10ல் 1134 இலககப் படத்தல் விபரிதத 3ம் துண்டு மேற்கு, தெற்கு 1965-8-6ல் சேர்வேயர் பி. ஏரம்பு அளந்து வரைந்த 170ம் இலக்க படத்திலே விபரித்த முருகன் மாணிக்கத்தின் ஆதனம், காணியின் பெறுமதி ரூபா 2348-80

கவனிப்புகள்:—

(அ) ஆதனம் முதலில் பங்காளருக்குள் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதி ரூபா 2348-80க்குக் குறையாமல் விற்கப்படும். அவ்விதம் அவர்கள் வாங்கத் தவறினுல் பின் பிரசித்த ஏலத்தில் பொது சனங்களுக்கு ஆகக் கூடிய கேள்விக் காரருக்கு விற்கப்படும்.

(ஆ) கொள்விலைப் பணம் ரூபா 100/- க்குக் குறைவானுல் முழுவதும் பிஸ்கால் சலாரும் உடனே கட்டவேண்டும். கொள்விலை ரூபா 100/- க்கு மேற்பட்டால் பங்காளர்களைத் தவிர்ந்த கொள்வனவுகாரன் உடனே கொள்விலையின் நாலில் ஒரு பங்கும் பிஸ்கால் சலர்றும் கட்டி. மிகுதிப் பணத்தை 30 நாட்களுக்குள் இறுக்கப்போவதும் திருப்திகரமான 2 பிணைகாரருடன் உடனே ஒப்பந்தம் எழுதல் வேண்டும்.

(இ) பிஸ்கால் சலாரின் விபரமாவது:- பிரசித்த விற்பனவுச் செலவு கொமிஷன் கொள்விலைப் பணத்தில் 100/-க்கு 2 வீதமும் பயணச் செலவு முதலியன.

சி. அ. மகாதேவன்
பிஸ்கால் அலுவலகம், வடமாகாண பிஸ்காலுக்காக
யாழ்ப்பாணம். 7-9-70

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நானமறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 11—9—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்